# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முறையீட்டு மனு எண்: 125/2017

ஆணை எண் 244 /2017/நாள் 05 –10–2017

திரு. மா ராஜசேகரன்,
27/8 கிழக்குத் தெரு,
பொத்தனூர் – 638 181,
நாமக்கல் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பொத்தனூர் தேர்வு நிலை பேரூராட்சி,
நாமக்கல மாவட்டம் – 638 182 -- எதிர் மனுதாரர்

ஆணை

திரு மா.இராஜசேகரன், 27/8, கிழக்குத் தெரு, பொத்தனூர், நாமக்கல் மாவட்டம் அவர்களது 29.05.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2017 ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 125/17 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு மா. இராஜசேகரன், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் நாமக்கல் மாவட்டம், பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சியில் (1) பல இறைச்சிக் கடைகள் பேரூராட்சி பகுதியிலும், ஜேடார்பாளையம், பி.வேலூர் நெடுஞ்சாலை இருமருங்கிலும் உள்ளதாகவும், (2) இப்பேரூராட்சிப் பகுதியில் எண்ணிலடங்கா ஸ்பான்பைப் மற்றும் ப்ளை ஆஷ் பைப் நிறுவனங்கள், போன்றவை உள்ளதாகவும் இவைகள் பொதுமக்களுக்கு பெருத்த இடையூறாக உள்ளதாகவும் இந்நிறுவனங்கள் உரிய சுற்றுச் சூழல் தடையின்மை மற்றும் உரிமம் இன்றி செயல்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இப்பேரூராட்சியில் இயங்கி வரும் (3) ஸ்ரீ கிருஷ்ணா பல்பொருள் அங்காடி உரிய உரிமமின்றி செயல்படுவதாகவும், (4) பொத்தனூர் பேரூராட்சியில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் அரசு விதிமுறைகளின்படி பணியமர்த்தப்படவில்லை எனவும் (5) இப்பேரூராட்சியில் இயங்கி வரும் சினிமா திரையரங்கம், திருமணக் கூடங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள் ஆகிய கட்டிடங்கள் உரிய நகர்ப்புற வளர்ச்சிக் குழும அங்கீகாரம் இல்லாமல் கட்டப்பட்டு செயல்பட்டு வருவதாகவும் ஆனால் இக்கட்டிடங்களுக்கு உரிய வரி விதிப்புகள் முறைகேடாக செய்யப்பட்டுள்ளன என தெரிவித்து

உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி தனது புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். மேலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பேரூராட்சியிலிருந்து பெறப்பட்ட தகவல் கடிதங்களின் நகல்களை இணைத்தனுப்பியுள்ளார். மேற்படி தகவல்கள் திருப்திஅளிக்ககூடியதாக இல்லை என மனுதாரர் கருதும்பட்சத்தில் மேற்படி சட்டக்கூறுகளின்படி சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலருக்கு முறையீடு செய்து கொள்ள வழி வகை உள்ளது.

இருப்பினும், இப்புகார் மனு தொடர்பாக உரிய விளக்கத்தினை அளிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், பொத்தனூர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண் 775/2017/பே/நாள் 17.07.2017 மூலம் ஆணையிடப்பட்டது.

செயல் அலுவலர், பொத்தனூர் தேர்வு நிலை பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் தனது கடித எண் 334/2017 நாள் 28.08.2017 ன் மூலம் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள ஐந்து இனங்களுக்கான பதில்களை விரிவாக சமர்ப்பித்துள்ளார். மேற்படி பதில்கள் அடங்கிய கடித நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

செயல் அலுவலர், பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சியின் கடிதத்தின்பால் குறிப்பான புகார்/கோரிக்கைகள்/ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் அது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனம் / அமைப்புகளின் பெயர் மற்றும் முகவரி விவரங்களுடன் ஆதார ஆவண நகல்களுடன் முறையீட்டு மனுவை சமர்ப்பித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5-ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்.**

இணைப்பு

பொத்தனூர் தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் கடித நகல்.

-//உத்திரவின்படி அனுப்பப்படுகிறது//-

செயலாளர்.

**1.திரு மா.ராஜசேகரன்,**
**27/8 கிழக்குத் தெரு,**
**பொத்தனூர் – 638 181,**
**நாமக்கல் மாவட்டம்.**

**2.செயல் அலுவலர்,**
பொத்தனூர் தேர்வு நிலை பேரூராட்சி,
நாமக்கல் மாவட்டம்